# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.No. 58 / 2019

# CNR.No.TNCB19000

Date:29.10.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சுப்பிரமணி | **வயது** | 76 |
| **த/பெ** | கிருஷ்ணசாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | சிக்கதாசம்பாளையம் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 29th October 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு தொழில் காய்கறி வியாபாரம். முட்டைகோஸ், உருளைக்கிழங்கு மொத்த வியாபாரம் செய்துவருகிறேன். எனது முதல் மனைவியின் பெயர் பிச்சையம்மாள். எனது முதல் மனைவி உயிரோடு இருக்கும் போதே இரண்டாவதாக முத்துலட்சுமி என்பவரை திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். முதல் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் முத்துலட்சுமியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன்.

பிச்சையம்மாள் மூலமாக 3 ஆண்கள் மற்றும் 1 பெண் அதில் மூத்த மகன் பிரதிவாதி ஆவார். முத்துலட்சுமிக்கு உமாமகேஷ்வரி மற்றும் கௌதம்சக்கரவர்த்தி ஆகியோர்கள் பிறந்தார்கள். சிவசங்கரன் , சங்கரலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோர்களும் பிரதிவாதியும் முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் ஆவார்கள். சிவசங்கரன் மற்றும் சங்கரலிங்கம் ஆகியோர்கள் மேட்டுப்பாளையத்தில் காய்கறி வியாபாரம் செய்கிறார்கள் என்றால் சரிதான். ராஜேஸ்வரி திருமணம் ஆகி அவரது கணவருடன் சிதம்பரத்தில் இருக்கிறார்.

பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தியும், உமாமகேஷ்வரி ஆகியோர்கள் அமெரிக்காவில் இருக்கிறார்கள், கௌதம் சக்கரவர்த்தி சாப்ட்வர் Engineering படித்திருக்கிறார்

அவருக்கு விபத்து ஏற்பட்டதால் வேலைக்கு செல்லவில்லை. பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி 2003 ஆம் வருடத்திலிருந்தே அமெரிக்காவில் வேலையில் இருந்து வருகிறார். முதல் மனைவிக்கு படிப்பறிவு இல்லை, எனக்கும் பிச்சையம்மாளுக்கும் மேட்டுப்பாளையத்தில் உள்ள ICICI வங்கியில் தனித்தனியாக கணக்கு உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. நான் பல வருடங்களாக வருமான வரி செலுத்திவருகிறேன். தற்போது வரை செலுத்தி வருகிறேன் என்றால் தற்போது வியாபாரம் சரியாக இல்லை எப்போது இருந்து செலுத்துவது இல்லை என்றால் வயதானதால் எனக்கு ஞாபகம் இல்லை.

ICICI வங்கியை தவிர வேறு வங்கியில் எனக்கு கணக்கு உள்ளதா என்றால் Indian வங்கியில் உள்ளது. எனது மனைவி பிச்சையம்மாள் வேலைக்கு சென்றது இல்லை. கிருஷ்ணமூர்த்தி அமெரிக்காவிற்கு சென்ற பின்னர் எனக்கும் பிச்சையம்மாளுக்கும் பணம் அனுப்பி வைத்தார் என்றால் எனக்கு அனுப்பவில்லை, பிரதிவாதி அவரது அம்மாவிற்கு அனுப்பிவைப்பார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

ICICI வங்கியை தவிர பிச்சையம்மாளுக்கு வேறு வங்கி கணக்கு இல்லை. பிச்சையம்மாள் எந்த வருடம் காலமாகினார் என்றால் ஞாபகம் இல்லை. பிச்சையம்மாள் இறக்கும் போது அவரது பெயரில் மேட்டுப்பாளையத்தில் 55 செண்ட் பூமி இருந்தது என்றால் சரிதான். அதைத் தவிர பிச்சையம்மாள் மற்றும் முத்துலட்சுமி ஆகியோர் கூட்டுப் பெயரில் 3 ½ செண்ட் மற்றும் 5 ½ செண்ட் வீட்டுடன் பூமி இருந்தது என்றால் சரிதான்.

3 ½ மற்றும் 5 1/2 செண்ட் பூமியில் உள்ள வீட்டை நான் வாடகைக்கு விட்டு இருக்கிறேனா என்றால் இல்லை நான் தான் குடியிருக்கிறேன். அதை பாகம் பிரிக்கவில்லை, 55 செண்டில் 25 செண்ட் ஐ விற்பனை செய்வதற்காக பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி பொது அதிகாரம் கொடுத்திருந்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 25 செண்ட் பூமியை நான் எனக்காகவும் பிரதிவாதியின் பொது அதிகார முகவராகவும் மற்றும் பிச்சையம்மாளின் இதர வாரிசுகளுடன் சேர்ந்து மதன்பிரகாஷ் என்பவருக்கு 27.03.2018 ஆம் தேதி கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பத்திரத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஞாபகம் இல்லை. 55 செண்டில் ஒரு பகுதிதான் எனது சுவாதீனத்தில் இருக்கிறது என்றால் 30 செண்ட் உள்ளது. 25 செண்ட் பூமியை கிரையம் செய்து

கொடுப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்பு தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு நான் தான செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி அமெரிக்காவில் அவருக்கு உயர் பதவி கிடைத்ததாகவும் அதற்காக உத்தரவாதத்திற்காக ( Security ) கொடுக்க வேண்டும் என்று கேட்டதால் 40 செண்ட் ஐ உத்தரவாதத்திற்காக ( Security ) பிரதிவாதிக்கு செட்டில் மெண்ட் எழுதி வைத்தேன். பிரதிவாதி கூடிய சீக்கிரத்தில் திருப்பி கொடுப்பதாக சொன்னார் ஆனால் கொடுக்கவில்லை. மேற் சொன்ன காரணத்தை தான் வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

40 செண்ட் என்பது எனக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 7 செண்ட் பூமியில் ஒரு பகுதி என்றால் சரிதான். 40 செண்ட் போக மீதமுள்ள 67 செண்ட் ஐ UKS Cold Storage என்ற நிறுவனத்திற்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டேன். எனது மகனான பிரதிவாதிக்கு 40 செண்ட் செட்டில் மெண்ட் எழுதி வைப்பதற்கு முன்பாகவே கிரையம் செய்து கொடுத்துவிட்டேன். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை.

கிரையம் கொடுத்த வகையில் பெறப்பட்ட பணத்தில் எனது மனைவி முத்துலட்சுமிக்கு மகாதேவபுரத்தில் ஒரு மனையை வாங்கி கொடுத்தேன் என்றால் சரியல்ல.கிரைய தொகையை என்ன செய்தேன் என்றால் மற்ற மகன்களுக்கு பிரித்து கொடுத்தேன். யார் யாருக்கு எவ்வளவு கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. அந்த தொகையில் கிருஷ்ணமூர்த்திக்கு எவ்வளவு கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் கேட்டு வாங்கிக் கொண்டார். அந்த தொகையில் கிருஷ்ணமூர்த்திக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் அந்த சொத்தை விற்பனை செய்தேன் என்றும், அதனால் கிருஷ்ணமூர்த்திக்கு கிரைய தொகையில் பெற்ற பணத்தை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. கிருஷ்ண மூர்த்திக்கு எழுதி கொடுத்த செட்டில் மெண்ட் பத்திரம் எழுதும் போது கிருஷ்ணமூர்த்தி அமெரிக்காவில் இருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. அந்த பத்திரத்தை நான் தான் பாபு என்கிற வழக்கறிஞரை வைத்து செட்டில் மெண்ட் பத்திரம் எழுதினேன் என்றால் தெரியாது.

செட்டில் மெண்ட் ஆவணத்தில் உள்ள வாசகங்கள் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தை யார் தயார் செய்தார் என்று சொல்லமுடியாது. பதிவு அலுவலகத்திற்கு

சென்று கையொப்பம் செய்து பதிவு செய்தது நான் தான் என்றால் ஞாபகம் இல்லை. அசல் பத்திரம் எனது கைக்கு எப்படி வந்தது என்றால் ஞாபகம் இல்லை. நானே விருப்பப்பட்டு பிரதிவாதியின் மீதுள்ள அன்பினாலும், பாசத்தினாலும் தாவா சொத்தை பொறுத்து செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. உத்தரவாதத்திற்காக( Security ) செட்டில் மெண்ட் ஆவணம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்தாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிய 2 மாதங்களுக்கு பிறகு பிச்சையம்மாளுக்கு பாத்தியப்பட்ட 25 செண்ட் பூமியை கிரையம் செய்து அந்த கிரையத் தொகையில் கிருஷ்ணமூர்த்திக்கு சேரவேண்டிய பங்கினை நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.25 செண்ட் போக மீதமுள்ள 30 செண்ட் பூமியை பொறுத்தும் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தியிடம் பொது அதிகார ஆவணம் நான் கேட்டேன் என்றும், அவர் கொடுக்க மறுத்ததினால் இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சொத்தை தவிர வேறு ஒரு சொத்தான காய்கறிமண்டியை சிவசங்கர் பெயரில் எழுதி கொடுத்தேன் அதில் தான் அவர் வியாபாரம் செய்கிறார். அவர்தான் என்னை கவனித்துவருகிறார். சிவசங்கர் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பா அல்லது பின்னரா கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த செட்டில் மெண்ட் ஐ ரத்து செய்ய எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

செட்டில் மெண்ட் ஆவணம் எழுதும் போது பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி அமெரிக்காவில் இருந்தார் என்றும் நான் சுயமாக, விருப்பப்பட்டு கிருஷ்ணமூர்த்திக்கு எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. செட்டில் மெண்டின் அசல் ஆவணத்தை பிரதிவாதி அமெரிக்காவில் இருந்து திரும்பி வரும் போது கொடுப்பதாக உறுதி அளித்திருந்தேன் என்றால் சரியல்ல. அதற்குள் எங்களுக்குள் 30 செண்ட் பூமியை பொறுத்து பிரச்சனை ஆனதால் பிரதிவாதி அமெரிக்காவில் இருந்து வருவதற்குள் இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

கிருஷ்ணமூர்த்தி எனக்கும் எனது மனைவிக்கும், அவரது சகோதரர், சகோதிரிகளுக்கும் பண உதவி செய்தார் என்றால் சரியல்ல. எனது பெயரிலும்,

பிச்சையம்மாள் பெயரிலும் தனித்தனியாக ICICI வங்கியில் கணக்கு துவங்கப்பட்டு அமெரிக்காவில் இருந்து பணம் அனுப்பி வைத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து செட்டில் மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் கிருஷ்ணமூர்த்திக்கு பாத்தியப்பட்டது என்றும் கிருஷ்ணமூர்த்திக்கு செட்டில் மெண்ட் ஆவணத்தின் அசலை கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. செட்டில் மெண்ட் ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.10.29 18:34:34 +0530

சார்பு நீதிபதி.

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.